மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
இரவிக்கைகளுக்கான
தெரிவுகளுக்கு
* சோபனா *
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 19 வியாழக்கிழமை (04 - 08 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 249

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
அதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
* சோபனா *
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

எக்கட்சியும் பெரும்பான்மை பெறாவிடின் சிறிமா தலைமையில் தேசிய அரசாங்கம்

சு. கவுக்கு எதிரான ரீ. வீ. படத்தை திரையிடத் தடை

கொழும்பு: ஓக. 4
1970-77 கால சுதந்திரக் கட்சி ஆட்சியில் இடம்பெற்ற சம்பவங்களை வைத்து தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சிப் படத்தை திரையிடக் கூடாது என்று தடை விதிக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் பிரசாரத்துக்காக

ஐந்து தமிழ்க் குழுக்கள் தீவுப்பகுதிகளில் முகாம்

கொழும்பு, ஓக. 4

யாழ். மாவட்டம் — தீவுப்பகுதிகளில் தேர்தல் பிரசாரஞ் செய்வதற்காக ரெலோ, ஈரோஸ் மற்றும் புளொட் ஆகிய அமைப்புகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் விமானப் படை விமானம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களில் ரெலோவைச் சேர்ந்த எஸ். விநோதலிங்கம், புளொட்டைச் சேர்ந்த கரவை கந்தசாமி, ஈரோஸைச் சேர்ந்த கே. சுதாகரன் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

இவர்களை காங்கேசன்துறையில் இருந்து அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகியவற்றிற்கு கடல் வழியாக அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இத் தீவுகளில் சில தினங்கள் தங்கி தேர்தல் பிரசாரங்களை இவர்கள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்று தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. பி. டி. பி. ஆகிய குழுக்களைச் சேர்ந்தோர் ஏற்கனவே தீவுப்பகுதிகளில் தங்கியிருந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

யாழ். மாவட்டத்தில்

10 எம்.பிமாரை தெரிவுசெய்ய 16 ஆயிரம் வாக்காளர்கள்

யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஐந்து லட்சத்து 96 ஆயிரம் வாக்காளர்களில் 16 ஆயிரம் பேரே இம்முறை வாக்களிக்கக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் 16 ஆயிரம் பேரினதும் வாக்குகளின் அடிப்படையிலேயே யாழ். மாவட்டத்துக்கான பத்து எம். பிக்களும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

தீவுப் பகுதியில் உள்ள ஆயிரம் பேரும் —

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடக்குக்கு வெளியே வசித்து வருவோரில் வாக்களிப்பதற்காகப் பதிவு செய்த பதினையாயிரம் பேருமே யாழ். மாவட்டத்துக்குரிய வாக்காளர்களாக வாக்களிக்கவுள்ளனர்.

தீவுப் பகுதியில் கொத்தணி முறையில் 15 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். தேர்தல் வேலைகளுக்கு சிங்கள, முஸ்லிம் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். மாவட்டத்தில் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு சிங்கள, முஸ்லிம் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கான தேர்தல் அதிகாரியாக அரச அதிபருக்குப் பதிலாக சிங்கள அதிகாரி ஒருவரையும் —

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளருக்கு பதிலாக முஸ்லிம் அதிகாரி ஒருவரையும் — அரசு நியமனம் செய்துள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளர் திரு. அருந்தவச்செல்வமும் தாம் தேர்தல் வேலைகளை மேற்கொள்ள முடியாது என தேர்தல் ஆணையாளரிடம் உறுதிபடக் கூறியதையடுத்தே இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

பருத்தித்துறைக்கு இன்று 'பிளாம்பயன்' வந்து திரும்பும்

திருகோணமலையில் இருந்து நேற்று மாலை புறப்பட விருந்த 'பிளாம்பயான்' கப்பல் இன்று காலை நேரடியாக பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி மேரி பேர்கின்ஸ் தெரிவித்தார்.

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் இக் கப்பலில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் வைத்து கொழும்பு செல்லும் நோயாளர்களுடன் இன்று நண்பகல் புறப்படும் இக்கப்பல் காங்கேசன்துறையில் சோதனையை முடித்துக்கொண்டு திருகோணமலைக்கு செல்லும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3-4-17)

அரச அதிகாரிகளுக்கு சலுகை விலையில் காணி!

அவசரமாக வழங்கப்படுகிறது

கொழும்பு, ஓக. 4

பொதுத் தேர்தலுக்கு முன்பதாக உயர்நிலை அரச அதிகாரிகளுக்கு வீடு கட்டுவதற்கான காணித் துண்டுகளை சலுகை விலையில் வழங்கும் நடவடிக்கையை அரசு அவசரமாக மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸா, பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா, விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க உட்பட அமைச்சுகளின் செயலாளர்கள் பலரும் காணித் துண்டுகளை சலுகை அடிப்படையில் பெற விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வழங்கப்படும் காணித் துண்டுகள் பெலவத்தை, கோட்டே, பத்தரமுல்ல, தெஹிவளைப் பகுதிகளில் அமைந்துள்ளன.

விஜேதுங்காவின் திட்டம் இது

கொழும்பு, ஓகஸ்ட் 4

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் — தொங்கு நாடாளுமன்றம் ஏற்பட்டால் — சிறிமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராக நியமித்து அவரின் தலைமையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கச் செய்வது என ஜனாதிபதி விஜேதுங்கா திட்டமிட்டிருக்கிறார்.

கொழும்பு, அரசியல் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

தேசிய அரசு ஒன்றை அமைப்பதன் மூலம் எதிரணியினரின் கை ஓங்குவதைக் கட்டுப்படுத்தவும் —

பொதுத் தேர்தலின் பின்னர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனது நிலையைப் பலப்படுத்தவும் —

சிறிமா தலைமையில் தேசிய அரசு ஏற்படுத்துவதன் மூலம் தனக்கு எதிராகப் பெருமளவில் மக்கள் செல்வாக்கைப் பெற்றுவரும் சந்திரிகா குமாரணதுங்காவை எதிரணிக்குள் தலையெடுக்காமல் அடக்கவும் —

ஜனாதிபதி விஜேதுங்கா திட்டமிட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-ஊ-6)

பொதுத்தேர்தலில் பொ.ஐ.மு. வெற்றியீட்டுவது மிக உறுதி!

லண்டன் கல்விமான் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 4

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும்.

லண்டன் பல்கலைக்கழக பொதுநலவரசுக் கல்வி நிறுவகப் பணிப்பாளர் திரு. ஜேம்ஸ் மனர் என்பவர் இன்ரநாஷனல் ஹெறால்ட் ட்ரிபியூன்' பத்திரிகைக்கு அனுப்பிய கடிதத்தில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் கடந்த தசாப்தத்தில் இடம்பெற்ற வன்செயல்கள், ஊழல் மற்றும் மோதல்கள் முடிவுற்று ஜனநாயகம் மீண்டும் உதயமாகும் நிலை காணப்படுவதாகவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

கடிதத்தில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

அரச பயங்கரவாதச் செயல்களினால் தமிழ், சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் சந்திரிகா தலைமையிலான

[- ஆம் பக்கம் பார்க்க]

ஹமில்டன் வந்த கையோடு புலிகள் ஊடுருவித் தாக்குதல்!

கொழும்பு, ஓக. 4

பாதுகாப்பு அமைச்சின் அதி உயர் அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலி தளத்துக்குச் சென்று இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி மதிப்பீடு செய்து திரும்பிய கையோடுதான், விமானப்படைத் தளத்திற்குள் கரும்புலிகள் ஊடுருவித் தாக்கும் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பலாலி இராணுவத் தளத்துக்கு விஜயம் செய்தார்.

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மொஹான் சமரசேகரா ஆகியோரும் திரு. வனசிங்கவுடன் பலாலிக்குச் சென்றிருந்தனர்.

யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பான இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை அதிகாரிகளுடன் தளபதிகளும் அமைச்சுச் செயலாளரும் பேச்சுக்கள் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திங்கள் பின்னிரவில் கரும்புலிகளின் ஊடுருவல் தாக்குதல் இடம்பெற்றது. (உ-எ)

இந்திய அமைதிப்படை மீதான தாக்குதல்கள் குற்றமாகா!

ஸ்ரீலங்கா நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 4

இந்திய அமைதிப் படை மீதான தாக்குதல்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்வரும் குற்றங்களாக அமையமுடியாது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த வழக்கு ஒன்றில் அளித்த தீர்ப்பில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியான கை-ரய விளை கமலநாதன் பொலீஸாருக்கு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் 'வொயர் டயர்' விசாரணை முடிவில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

அப்போதே அவர் முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

1 8 1987க்கும் 1. 1. 1989க்கும் இடைப்பட்ட காலத்தில் வட்டுக்கச்சியில் சட்டவிரோதமாக ஏ. கே-47 ரைபிளும், இயந்திரத் துப்பாக்கியும்,

(3 ஆம் பக்கம் பார்க்க)

ருகுணுவில் சோதனை முடியவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 4

கொழும்பு துறைமுகத்தில் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள "ருகுணு" கப்பல் தொடர்ந்து அருவி அருவி சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இத்தகவலை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் யாழ். தொடர்பு அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி முதல் இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

கடற்படையினரின் சோதனை முடிந்து "ருகுணு" இம்மாதம் முதலாம் திகதி கொழும்பிலிருந்து புறப்படும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சோதனை [illegible] னும் முடியவில்லை என்று நேற்றுக் கிடை[illegible] தெரிவித்தன. (அ-3)

முச்சந்தி முனி



கவிழுற அரசிலை பிடுங் [illegible] அவசரமாய் காணிகளை [illegible] போனை......!

துப்பாக்கிகளை மீளப்பெறும் பொலிஸார்

கொழும்பு, ஓக. 4

அனுராதபுரம் மாவட்டத்தில் கமவசாயிகள் வைத்திருக்கும் துப்பாக்கிகளை பொலிஸார் திரும்பப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் வன்செயல்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அனுராதபுரம் தற்போது கணிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் துப்பாக்கிகள் மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

தேசிய அரசு அமைப்பதை சு.க. முற்றாக எதிர்க்குமாம்

பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முற்றாக எதிர்ப்பதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போனால் சிறிமாவைப் பிரதமராக்கி தேசிய அரசு ஒன்றை அமைக்க ஜனாதிபதி விஜேதுங்கா திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்டபோதே அவர் இப்படிப்பதிலளித்தார்.

"சந்திரிகா பிரதமராவதை சிறிமா எதிர்க்கவில்லை. இது தொடர்பாக சிறிமா விரைவில் அறிக்கை ஒன்றை விடுப்பார்."— என்றும் அவர் சொன்னார். [உ-எ]

நாடு திரும்பினார் கூரே; பிரசாரத்தில் ஈடுபடுவார்

குறுகியகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த வீடமைப்பு நிர்மாணத்துறை நகர அபிவிருத்தி அமைச்சர் சிறிசேன கூரே கடந்த ஞாயிறன்று மாலை நாடு திரும்பினார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. கட்சி சார்பில் பிரசாரக் கூட்டங்களில் அவர் கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்தில் நான் பங்குபற்றுவேன்; கூட்டங்களிலும் உரையாற்றுவேன்.

"நான் நிரந்தரமாகவே வெளிநாட்டில் தங்கிவிடப் போகிறேன் என்று கிளப்பிவிடப்பட்ட கதையெல்லாம் வீண்புரளி இதோ நான் வந்துவிட்டேன்"— இவ்வாறு அமைச்சர் கூரே தெரிவித்தார். (உ-ஐ)

பொய் முறைப்பாட்டின் மீது சு.க. முன்னாள் எம்.பி. கைது

பொலன்னறுவையில் பதற்றம்

கொழும்பு, ஓக. 4

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் பொலன்னறுவை மாவட்டத்தின் சுதந்திரக் கட்சி எம். பியாக இருந்த மைத்திரிபால சிறிசேன பெண் ஒருவரின் சங்கிலியைப் பறித்தார் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார் என்று செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

தமது வாகனத்தின் மீது ஐ. தே. க. ஆதரவாளர்கள் கல்வீச்சு நடத்தியது குறித்து அரலகன்வில பொலீஸ் நிலையத்துக்கு இவர் முறைப்பாடு செய்யச் சென்றார்.

ஆனால் அவரின் முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலீஸார் அதன் பின்னர் ஐ.தே.க. ஆதரவாளர்களினால் செய்யப்பட்ட பொய் முறைப்பாட்டின் மீது அவரைக் கைது செய்தனர்.

சந்திரிகா குமாரணதுங்க பங்குபற்றும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் இன்று பொலன்னறுவையில் நடக்க இருக்கையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன கைது செய்யப்பட்டது அங்கு பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பொலீஸின் இந்த நடவடிக்கை அரசியல் துரோகம் என்று பொலன்னறுவை விவசாயிகள் முன்னணியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பொ. ஐ. மு. அரசுக்கு உதவி வழங்க உலக வங்கி உறுதி!

சந்திரிகா வெளியிடும் தகவல்

கொழும்பு, ஓக 4

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததும் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள உதவித் திட்டங்களை நிறைவேற்ற விரிவான முறையில் உதவப் போவதாக முன்னணியின் தலைமைத்துவத்துக்கு உலக வங்கி உறுதியளித்துள்ளது.

சந்திரிகா குமாரணதுங்க மகியங்கனையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசுக்கு வழங்கும் உதவிகளை உலக வங்கி நிறுத்தி வைத்துள்ளது. அரசின் செயற்பாடுகளில் முறைகேடுகளும் ஊழல்களும் நிரம்பியுள்ளதே இதற்குக் காரணமாகும் என்றும் அவர் கூறினார். (உ-எ)

கிராம சேவையாளர் சேவை மீண்டும் அரசாங்கத்திடம்!

இப்போது மாகாண சபைகளின் நிர்வாகத்துக்கு உட்பட்டிருக்கும் கிராமசேவையாளர் சேவை மீண்டும் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

இது சம்பந்தமான முடிவு நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

முன்னர் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இருந்த கிராம சேவையாளர் சேவை, பிரதேச செயலக நிர்வாக முறை அறிமுகமானதோடு மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

கொழும்பு மாவட்ட செயலாளர் சனத் வீரக்கோன் தலைமையிலான விசேட குழு செய்த சிபார்சுகளுக்கமைய கிராம சேவையாளர் சேவையை அரசு பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முடிவாகியது.

சகல கிராம சேவையாளர்களுக்கும் பொதுவான ஒழுக்க நெறிக்கோவை தேவைப்படுவதனால் அந்த சேவையை மறுசீரமைக்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கிராம சேவையாளர்கள் தொழிற்சங்கங்களும் இந்த சேவையை அரசாங்க நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருமாறு கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ-4)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மூன்று கதவு தேக்கு அலுமாரி, மூன்று கதவு முதிரை அலுமாரி, தொட்டில், கட்டில், டிரெசிங் ரேபிள், குசன் செற்றி, சாப்பாட்டு மேசை, கதிரைகள், கோழிக்கூடு மற்றும் தளபாடங்கள். ந. ஸ்ரீதேவன், இல. 325, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி (குறிஞ்சி மெடிக்கல் அருகில்). (32227)

5 மாத நல்லின முட்டை இடும் பருவத்தில் உள்ள பேட்டுக் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. ஜீவா, கல்லாரை, மல்லாகம். (32215)

Prima Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32235)

சேவல் குஞ்சு விற்பனை

பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32213)

முட்டைக்கோழி விற்பனை

[illegible] பிறவுண் முட்டை இடும் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (32211)

புலமைப் பரிசில் - 94

Bond கல்வி நிறுவனத்தால் 31-7-94, 02-8-94, 04-8-94, திகதிகளில் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம்-தமிழ்) விடைகளுடன் 10/- மட்டும் எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்; (7559)

தவறிவிட்டது

முக்கிய ஆவணங்களும் ஒரு தொகைப் பணமும் அடங்கிய மண்நிற கைப்பை ஒன்று மானிப்பாய் இந்துக்கல்லூரி படிக்கும், ஒட்டுமடம் சந்திக்கும் இடையே (யாழ்-மானிப்பாய் வீதி) கைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். ச. நகுலேஸ்வரன் உ. அரச அதிபர் பணிமனை ஒழுங்கை, சண்டிலிப்பாய். [7570]

28-07-94ஆம் திகதி அதிகாலை கிளாலிக்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் சங்கீதக்கொப்பிகள், புத்தகங்கள், டயறி, சப்பாத்து, செருப்பு மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. புத்தகம் கொப்பிகள் எனக்கு அவசியம் தேவைப்படுவதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். வி. குகநாதன், பாலன் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32219)

காவேரி சீயாக்காய்

ஆயுர்வேதமான இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது காவேரி சீயாக்காய்ப் பவுடர். இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப்பவுடர் என்று கேட்டுவாங்கவும். (32231)

ஆண்டு-3, 4

புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஏற்ப அடிப்படையிலிருந்து ஆண்டு3, ஆண்டு4ற்கு வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. இம்மாணவர்களுக்கு மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் வகுப்புகள் நடைபெறுகின்றன. Week end Classes 06-08-94 சனி பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32234)

புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுத் தரும் நிறுவனத்தால் 31-7-94 ஞாயிறு 2 8-94 செவ்வாய், 4-8-94 வியாழன் வெளியிடப்பட்ட பயிற்சி வினாத்தாள்களை (தமிழ், கணிதம்) இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32233)

அடையாள அட்டை

மங்களவதனி குணரத்தினம் ஆகிய எனது 688280087V இலக்கம் கொண்ட அடையாள அட்டையும், பயிற்சி நெறிக்குரிய அடையாள அட்டையும் கிளாலிக்கரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ரூபா 1000/- சன்மானம் வழங்கப்படும். சுந்தன் களஞ்சியம், 323/C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (32232)

ECOLOM

மனோகரா சந்தி

அளவையியல்

95, 96

புதிய வகுப்புகள்
ஆரம்பம்

ஆரம்பம்: 04 08-1994
பிற்பகல் 4 மணி

ஆசிரியர்
A. பிரபாகரன்

(சி/8826)

---

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
27 — 05 — 1933

மறைவு:
04 — 08 — 1989

அமரர் தம்பிராஜா நடராஜா

(பிரதம லிகிதர் லோஜி எஸ்டேட்)
தலவாக்கலை

ஆண்டுகள் ஓடும் மறையும்
ஆழிசூழ் உலகம் ஓடுவரை
நின்முகம் நெஞ்சில நிறைந்திருக்கும்
எம்முடலில் உயிர் இருக்கும்வரை

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்.

'பவானி இல்லம்',
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(32226)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
பொன்னையா செல்லையா
மலர்வு: 30 — 01 — 1914
உதிர்வு: 24 — 01 — 1993

திருமதி
செல்லையா யோகம்மா
மலர்வு: 22 — 02 — 1924
உதிர்வு: 16 — 07 — 1993

உண்டாக்கிப் பாலூட்டி உமையவள்போற் பார்த்தெடுத்துக்
கொண்டு மகிழ்ந்த குலக்கொழுந்தாம் அன்னை பெற
மண்டுபெருந் தொண்டுகளால் மாண்புளித்த தந்தை பதம்
ஒண்டமிழ்ப்பா மாலையிதை உவந்து வைத்தே அஞ்சலித்தோம்.

அடைக நீங்கள் சாந்தி! சாந்தி!!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

([illegible])

ஸ்ரீ சத்திய ஸாயி பாபாவின் அன்பர்களுக்கு;
பிரபல எழுத்தாளரும், பிரமுகருமாகிய
அமரர்
"தேவன் - யாழ்ப்பாணம்"
எழுதிய

புட்டபர்த்தியில் 'நான்'

என்னும் நூல் வெளிவந்துவிட்டது
(பாபாவின் அஷ்டோத்திர சத நாமாவளியும் இணைக்கப் பெற்றது)
மலிவு விலை ரூபா **30/-** மட்டுமே
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

தொகையாகப் பெற:
ஆனந்தா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

[சி-8657]

45ஆம் நாள் நினைவஞ்சலி



மகாலிங்கம் மணிவண்ணன்

B. Sc. (Electrical Engineer)
(Lakehead University, Thunder Bay, Canada)

அன்னை மடியில்: 14-05-1966
ஆண்டவன் அடியில்: 21-06-1994

நாவற்குழியூர் சித்தி விநாயகன் அடித்தாமரையை முடிமேற்சூடி அகம் மிக நெகிழக் கசிந்துருகும் அன்பன். சித்தி விநாயகர் சனசமூக நிலைய உறுப்பினராய் ஊர் சிறக்க, ஊரார் மகிழக் கொண்டு பல ஆற்றிய கர்மவீரன் யாழ் / நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பிள்ளையாய், யாழ் / இந்துக்கல்லூரியின் மைந்தனாய் விளங்கியவன். மனித நேயத்தை மகத்தான பண்பாகப் போற்றி அனைத்து மக்கள் மனத்திலும் இடம் கொண்ட உத்தமன். ஏழாண்டுகளுக்கு முன் கனடா என்னும் நன்னாடடைந்து, பல்கலைக்கழகத்தில் பயின்று மின்பொறியியலாளர் பட்டம்பெற்ற அறிஞன். பெற்றோரையும், உடன் பிறந்தோரையும் அன்பாலணைத்த ஒரு சில திங்களின் பின், தன் 28ஆவது அகவையில், விண்ணடைந்து விநாயகன் திருவடி சேர்ந்தனன். அன்னான் ஆன்மா அமைதியடைய எல்லாம் வல்ல பிரணவப் பொருளை வழுத்துவோமாக.

உறவினர், நண்பர்கள்.

நாவற்குழி.

(32223)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் மாதவி சின்னத்தம்பி தில்லையம்பலம் கந்தையா

மலர்வு: 18 — 12 — 1928
உதிர்வு: 30 — 07 — 1989
திதி: 04 — 08 — 1994

ஈசனின் அருள் தரும் இனிய முகமும்
ஆதவன் ஒளி வீசும் தனிய அகமும்
சாற்றிடுதே உம் புகழை நிரமும் - அது
தேற்றிடுதே நம் நினைவுகளை அனுதினமும்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனை வேண்டிநிற்கும்;

— குடும்பத்தினர்.

[illegible] வீதி,
நல்லூர்.

(32224)

பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்துக்கு கணக்கு லிகிதர் (Accounts Clerks) பதவி வெற்றிடத்துக்கு க. பொ. த. (சா. த) அல்லது க. பொ. த. (உ.த) தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். கணக்குப்பதிவு, தட்டெழுத்து என்பவற்றில் முன் அனுபவம் இருப்பதுடன் விவசாயத்துறை அனுபவத்தை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 15-08-94க்கு முன் விண்ணப்பங்களை அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் மருதனாமடம், சுன்னாகம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

அதிபர்

(32242)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

உறுப்பினர் அனைவர்க்கும்

27 ஆம் தேசிய நிர்வாகசபை கூட்டத்தில் எமது யாப்பு புதிதாக திருத்தியமைப்பதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதில் அமையவேண்டியதென தாங்கள் எதிர்பார்க்கும் அம்சங்களை தங்கள் கோட்ட செயலகங்களிலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ எழுத்து மூலம் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எமது ஒன்றியத்திற்கான ஒரு இலட்சினையும் அமைக்கப்படவுள்ளது அதன் அமைப்பு பற்றிய தங்கள் கருத்துக்களையும் மேற்கூறிய திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி/8828)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
உடுவில் உப அலுவலகம்

அறிவித்தல்

பூவோடை
இந்துமயான அபிவிருத்திச் சங்கம்

பூவோடை இந்துமயானத்தை பராமரிப்பதற்காகவும், அபிவிருத்தி செய்வதற்காகவும் மேற்படி சங்கம் 31-07-1994 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். 15-08-1994 ஆம் திகதி முதல் பூவோடை மயானத்தில் தகனம் செய்வதற்கு பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும். உரிய கட்டணங்களை தகனம் செய்வதற்கு முன்னர் சங்கப் பொருளாளரிடம் செலுத்தி உரிய பற்றுச்சீட்டைப் பெற்று மயானக் காவலாளியிடம் ஒப்படைத்தல் வேண்டும். மேலதிக விவரங்களை உடுவில் உப அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கும் மேற்படி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டண விவரம்;

1. தகனம் செய்வதற்கு (விறகு அடுக்கல் உட்பட)	—	ரூபா 200.00
2. காடாற்றுவதற்கு	—	ரூபா 100 00

இந்த மயானத்தை பாவிப்பவர்கள் தங்கள் ஒத்துழைப்பை சங்கத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
03-08-1994.

(சி/5715)

31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு:
26 — 07 — 1954

உதிர்வு:
05 — 07 — 1994

வீரவாகு கஜேந்திரன்

காலன் அழைப்புத் தெரிந்துதான் தலைநகர் வந்தாயோ! நாம் அறியவில்லையே அறிந்திருந்தால் உன்நோய் தெரிந்திருந்தால் உன்தாய் ஓடோடி வந்திருப்பாரே! உன்முகம் காணாது உன் பெற்றோர் கதறுகிறார்கள். அன்பான தம்பியே! ஒன்றாக நாம் இருந்து வாழ்ந்தது எல்லாம் கனவாகியதே. எமக்கும் இறப்பு வரும்வரை உமை நாம் மறவோம். ஜேர்மனியில் இருக்கும் உன் மனைவி, பிள்ளைகள், சகோதரன் குடும்பத்தையும் நீ தெய்வமாய் இருந்து காப்பாற்றுவாய்.

துக்கத்தில் கலந்து கொண்ட அனைவரையும் நாளை (5-8-94) நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உம் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் உமை மறவா;
பெற்றோர், சகோதரி,
மைத்துனன், மருமக்கள்.

"கோகுலம்"
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(32225)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

விசித்திர தேர்தல்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலும் தேர்தல் நடத்தப்படுகிறது என்ற ''பெயருக்காகவே'' அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. உண்மையில் அது தீவுப்பகுதிக்கான தேர்தல் என்று கூறுவது தானும் பொருந்தவில்லை

தீவுப்பகுதியைச் சேர்ந்த மொத்த வாக்காளர்களில் ஐந்து சதவீதத்துக்கும் குறைந்தவர்களே 'பெயருக்கு' வைக்கப்படும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கப் போகிறார்கள்! உண்மையில் வாக்களிப்பு அவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. நிர்ப்பந்தம், அச்சுறுத்தல் ஆகிய அழுத்தங்களுக்குத் தம்மை இசைவுபடுத்திக்கொண்டு பலாத்காரத் தேர்தலில் அவர்கள் வாக்களிக்கப் போகிறார்கள்!

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் 90 சதவீதத்துக்கும் அதிகமான பிரதேசம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்றாலும் கூட, அப்பகுதிகளில் அரசாங்கத்தின் ஆணை செல்லுபடியாகாதிருப்பினும் கூட, அப்பகுதிகளில் அரசின் நிர்வாகத்துறை முடமாகிக்கிடக்கின்ற போதிலும், ''நாம் தேர்தலை நடத்திவிட்டோம்'' என்ற ''சாதனை'' ஒன்றை நிலைநாட்டுவதற்காகவே அரசாங்கம் தீவுப்பகுதித் தேர்தலை நடத்துகிறது.

தீவுப்பகுதியிச் மட்டும் வாக்களிப்பை நடத்திக்கொண்டு, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்படுவதாகக் கூறப்படுவது பெரும் கேலிக்குரிய செயல் என்பது எவரும் அறிந்த உண்மை. ஜனநாயகத்தையும், நாடாளுமன்ற முறைமையையும் அவமதிக்கும் இந்தத் தேர்தல், பல லட்சம் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளைத் தட்டிப் பறிப்பது ஒரு புறமிருக்க —

தேர்தல் எவ்வளவுக்கு பலாத்காரம் மிகுந்ததாக அமையப்போகிறது என்பதையும், எந்தளவு அடாவடித்தனமும், தில்லுமுல்லுகளும் நிறைந்ததாக இருக்கப் போகிறது என்பதனையும் இப்போது அங்கு நடக்கும் சம்பவங்கள் மிகத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன.

ஸ்ரீலங்காவின் தேர்தல் கடமைகளில் பொலீஸாரே ஈடுபடப் போகின்றனர். ஆனால் தீவுப்பகுதியின் ஓர் அங்கமான நெடுந்தீவில் பொலிஸார் கடமைக்குச் செல்ல முடியவில்லை. அரசாங்கப் படைகளின் ''வாலாக'' இயங்கும் ஈ.பி.டி.பி அமைப்பே பொலீஸாரின் கடமைகளைச் செய்யப் போகின்றது இத்தனைக்கும் இந்த அமைப்பு இத்தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகிறது.

அது மட்டுமா? தீவுப்பகுதித் தேர்தலை ''பெரும் மகத்தான'' தேர்தல் என்று கருதி அதில் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பாடு பெரும்பாடாகி விட்டது! அங்கு அவர்களால் தேர்தல் பிரசாரம் செய்ய முடியவில்லை! வாக்குகளைக் கேட்டு ஆதரவு திரட்ட இயலவில்லை.

அத்தோடு முடிந்ததா? ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் வேட்பாளர் ஒருவர் அச்சம் காரணமாகத் தமது பிரதேசத்தை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது. தேர்தல் பிரசாரத்துக்கு என்று கொழும்பிலிருந்து தீவுப்பகுதிக்கு வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் காணாமல்போய் உள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில் அங்கு நீதியான, சுதந்திரமான தேர்தல் நடைபெறும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது? ஆயுதபாணிகள் மேற்பார்வையில், அச்சத்தின் மத்தியில் நிர்ப்பந்தத்தின் பேரில் அவர்களுக்கே சொற்ப வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்ய, ஒரு விசித்திரமான தேர்தல் அங்கு நடக்கப் போகிறது. இதற்குப் பெயர் தான் ஜனநாயகமா?

பெயருக்கு வைக்கப்படும் இந்த அடாவடித் தேர்தலை வேண்டுமானால் ''கின்னஸ்'' சாதனைப் புத்தகத்தில் பதியலாம்!

தமிழகத்திலிருந்து திரும்பிய மீனவர் இருவர் இதுவரை பலி

ஐ. நா தூதரகத்திடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 4 தமிழகத்திற்கு அகதியாகச் சென்று கடந்த 1992 ஆம் ஆண்டு தாயகம் திரும்பி குருநகரில் வசித்து வந்த மீனவரான செல்வராஜா அன்ரனி (வயது 28) என்பவர் நேற்று முன்தினம் பன்னைக் கடலில் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தார்.

இவரது உறவினர்கள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். அலுவலகத்தில் இதுதொடர்பாகப் புகார் செய்துள்ளனர்.

இந்த விடயத்தை கொழும்பு மற்றும் ஜெனிவா அலுவலகங்களுக்கு அறிவித்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். அலுவலக அதிகாரி திரு. ஜே. ஏ. அசோக்குமார் தெரிவித்தார்.

தமிழகத்திற்கு அகதியாகச் சென்று திரும்பியவர்களில் படையினரின் தாக்குதல்களில் இதுவரை 2 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனராகவும், ஒருவர் காயமடைந்ததாகவும், மற்றொருவர் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும், தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

மீனவர் சடலம் மீட்பு

குருநகர், ஒக. 4 பன்னைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இருவரில் ஒருவரான ராசக்கோன் ஜஸ்ரின் (இந்திரன் வயது-20) என்பவரின் சடலம் அன்று இரவே அவரது உறவினர்களால் கடலில் இருந்து மீட்கப்பட்டது. (ஐ-51)

ஐ. தே. க. வென்றால் நானே பிரதமர்!

ரணில் விக்கிரமசிங்கா கூறுகிறார்

கொழும்பு, ஒக. 4 'பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஐ. தே. க. அதிகாரத்துக்கு வந்தால் நானே தொடர்ந்து பிரதமராக இருப்பேன்'

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இருந்து வெளியாகும் ''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அதிகாரப்போட்டி எதுவுமில்லை. பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் தான் குழப்பநிலை இருந்து வருகிறது.

அந்த முன்னணி தேர்தலில் வெற்றிபெற்றால் அரசமைக்க தன்னையே ஜனாதிபதி அழைக்க வேண்டும் என்று ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார். ஆனால் திருமதி சந்திரிகா அரசமைக்க தன்னையே அழைக்க வேண்டும் என்று கூறி வருகிறார்:

இப்படி பிரதமர் ரணில் மேலும் கூறினார். (இ-3

எண்ணெய்த் தாங்கி தீப்பிடித்து ஒருவர் காயம்

தென்மராட்சி, ஒக 4 டிராக்டரின் எண்ணெய்த் தாங்கியில் தீப்பிடித்ததன் காரணமாக, சாவகச்சேரி தனங்கிளப்பைச் சேர்ந்த ச. கணேசலிங்கம் என்பவர் காயமடைந்தார்.

எண்ணெய்த் தாங்கியினுள் உள்ள எண்ணெயின் அளவை தீக்குச்சியின் வெளிச்சத்தில் பார்க்க அவர் முயற்சித்த போது இச் சம்பவம் இடம்பெற்றது முகம் வெந்து போன நிலையில் அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (எ-1 17)

வெள்ளையர் காலத்தில் உருவான எல்லைகள் மாற்றப்பட வேண்டும்

பிரச்சினைக்கு இதுவே தீர்வு என்கிறார் சந்திரிகா

ஈழக் கோரிக்கைக்கு பதிலாக அதிகாரங்களை பரவலாக்கும் சிறந்த அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த அமைப்பு மாகாண சபையை விட சிறந்ததாக இருக்க வேண்டும். அதே போன்ற வெள்ளையர் காலத்தில் பிரிக்கப்பட்ட மாகாண எல்லைகள் மாற்றியமைக்கப்படவேண்டும். பிரபாகரன் இதனை விரும்பினாலும், விரும்பாது போனாலும் தமிழ் மக்களுக்கு அமைதியை ஏற்படுத்த இதனைச் செய்தாக வேண்டியிருக்கிறது

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உப தலைவரான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இவ்வாறு கூறியுள்ளார்.

தென்பகுதியில் கொட்டாவா என்னும் இடத்தில் நடந்த முன்னணியின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

வடக்கில் யுத்தத்தை ஏற்படுத்தியவர்கள் யார்? இன்று வவுனியாவுக்கு அப்பால் செல்லமுடியாதவாறு நாடு இரண்டாகத் துண்டாடப்பட்டுவிட்டது.

இந்த யுத்தத்தை நிறுத்த அரசு ஒருபோதும் முயற்சிக்க மாட்டாது. ஏனென்றால் யுத்தம் நின்றுபோனால் அவர்களுக்கு ''கமிசன்'' கிடைக்காது — என்றார். (ஐ-3)

பாலர் விளையாட்டு விழா

யாழ். பாலர் கல்விக்கழகம் நிர்வகிக்கும் 14 பாலர் பாடசாலைகளுக்கிடையேயான 23 ஆவது வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பல்கலைக்கழக விளையாட்டு அரங்கில் நடைபெறும். (ஐ 4)

பிரிவுபசாரம்

தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு அ. பேரம்பலத்திற்கு கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களால் பிரிவுபசார விழா அண்மையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது (எ-117)

புலிகளின் குரல் வானொலியில்

04 – 08 – 1994
வியாழன் இரவு
★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — உரை ''கள[illegible] சங்கம் மருவிய காலம்''
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் ''போறேன் குட்டடுப்பு வாங்க'' — உரையாடல்
★ 8-30 - செய்திகள்
★ 8-40 — இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி 1987 ஓகஸ்ட் 4 ஆம் திகதியன்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் சுதுமலையில் ஆற்றிய உரை
★ 8-50 - மலரும் மொட்டுக்கள்.

05 – 08 – 1994
வெள்ளி காலை
★ 7-02 – மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கானங்கள்
★ 7-30 செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

சிற்றூழியர் பதவி உயர்வு பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக 4 சிற்றூழியர் தரத்தில் உள்ளவர்களை எழுதுவினைஞர் தரத்துக்கு பதவி உயர்த்தும் பரீட்சை இம் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

மேற்கண்ட தகவலை யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படவில்லை (இ 3)

யுத்தம் நீடித்தால் பாதிப்பு பயங்கரமானதாக இருக்கும்

மாநகரசபை சுகாதாரப்பகுதி அறிக்கை

இந்த யுத்தம் நிறுத்தப்பட்டு விரைவில் இயல்பு நிலைமை மீட்கப்படாவிட்டால் சமூகத்துக்கு ஏற்படக்கூடிய நீண்ட காலப் பாதிப்பு பயங்கரமானதாக இருக்கும்.

யாழ். மாநகரமன்ற சுகாதார அதிகாரி அலுவலகம் வெளியிட்டுள்ள அரையாண்டு சுகாதார நிலைமை அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ் நகரத்தில் போஷாக்கு நிலைமை அபாயகரமானதாக இருக்கின்றது.

எதிர்கால சந்ததிகளை இது பாதிக்கும்.

யுத்தத்தால் குழந்தைகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பயப்பிராந்தி குழந்தைகளின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்கனவே பாதித்துள்ளது.

ஆட்கள் கூடுதலாக வசிக்கும் போதிய காற்றோட்டம் இல்லாத வீடுகள், சரியான மலசலகூட வசதியின்மை, நகரத்தின் சில பகுதிகளில் சுத்தமான தண்ணீரின்மை முதலிய காரணங்களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் — இப்படி அறிக்கை கூறுகிறது. (உ-4)

மத்திய கல்லூரியில் நாவலர் சிலை

யாழ் மத்திய கல்லூரியில் விரைவில் ஆறுமுக நாவலரின் சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)

மீனவர் ஓய்வூதிய திட்டம் அங்குராப்பணம்

காங்கேசன்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டம் அண்மையில் இணுவிலில் நடைபெற்ற போது மீனவர் ஓய்வூதியத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

வலி - வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளர் திரு. எஸ். தவநாதன் சங்கத்தின் பதிவுச் சான்றிதழை சங்கத்தின் தலைவர் திரு. செ. கமலநாதனிடம் கையளித்தார். (இ)

நல்லூர் லயன்ஸ் வைபவம்

யாழ்ப்பாணம் ஒக. 4 நல்லூர் லயன்ஸ் கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்கும் வைபவமும் அண்மையில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன

இந் நிகழ்வில் லயன் எஸ். இராமகிருஷ்ணனும் லயன் செல்வி எஸ் சின்னப்புவும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்கள்.

அடுத்த மாதம்

கம்பஹாவில் நடக்கவிருந்த கம் உதாவ நிகழ்ச்சி ரத்து!

கொழும்பு, ஒக. 4 எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் கம்பஹா மாவட்டம் — திவுலப்பிட்டியாவில் நடத்தப்படவிருந்த கம் உதாவ கொண்டாட்டத்தை அரசு ரத்துச் செய்து விட்டது.

தவிர்க்க முடியாத காரணங்களினால் இது ரத்துச் செய்யப்பட்டதாக வீடமைப்பு நிர்மாணத்துறை, நகர அபிவிருத்தி அமைச்சின் சிறப்புத் திட்டப்பிரிவு தெரிவித்தது. அக்காரணங்கள் எவை என்று விளக்குவதற்கு திட்டப்பிரிவின் சார்பில் இத் தகவலைவெளியிட்ட அதிகாரி மறுத்து விட்டார்.

கடந்த ஜூன் மாதத்தில் இந்த கம்உதாவ நடத்தப்படவிருந்தது. பாதகமான காலநிலை காரணமாகவே அது செப்டம்பருக்கு பின்போடப்பட்டது. பிரதமர் ரணிலின் விசேட கோரிக்கையின் மீது கம்பஹா மாவட்டத்தில் அதை நடத்துவது என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது.

இப்போது அது மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்போது கம்பஹா மாவட்டத்தைவிட்டு கொழும்பு மாவட்டத்தில் ரணில் போட்டியிடுவது தெரிந்ததே.

பெண் எழுத்தாளர் நஸ்றீன் நேற்று நீதிமன்றத்தில் சரண்!

பிணையில் செல்ல அனுமதி

லண்டன், ஒக. 4 பங்களாதேஷில் சர்ச்சைக்கு இலக்காகியிருக்கும் பெண் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்றீன் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்ததை அடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

நீதிமன்றத்தில் இருந்து வெளியேறிய அவர் எங்கு சென்றார் என்று அறியமுடியவில்லை.

இஸ்லாமிய சமயத்திற்கு எதிரான கருத்துக் கூறியதற்காக இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள் இவரின் உயிருக்கு குறி வைத்திருப்பது தெரிந்ததே.

வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றில் தற்போது தஞ்சமடைந்திருப்பதாகக் கருதப்படும் நஸ்றீன் நீதிமன்றத்தில் பிணை அனுமதி பெற்றிருப்பதால் பங்களாதேஷை விட்டு வெளியேறி அமெரிக்காவில் தஞ்சமடையக் கூடும் எனக் கருதப்படுகிறது. (உ-4)

இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குண்டும் வைத்திருந்ததாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எதிரி மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது நீதிபதி தமது தீர்ப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளுக்கும் இந்திய அமைதிப்படை மீதான தாக்குதல்களுக்கும் என்ன தொடர்பு உள்ளது என்பதை ஒருவரும் புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

1979 ஆம் ஆண்டில் தற்காலிக அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இருந்தும் இச்சட்டம் கடந்த 15 ஆண்டுகளாக அமுலில் இருக்கிறது.

குறிக்கப்பட்ட ஆட்கள், உடைமைகள் ஆகியவற்றுக்கு எதிராக குற்றம்புரிந்தவர்களை கைது செய்து தண்டிக்கவும், இப்படியான தாக்குதல் பற்றிய தகவல்கள் தெரிந்திருந்தும் அதனை உரியவர்களிடம் தெரிவிக்கத் தவறியவர்களை பிடித்து தண்டிக்கவுமே இச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது

இந்திய அமைதிப்படையினர் சர்வதேச அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகள் அல்லர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் அவர்கள் பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. இந்திய அமைதிப்படை மீதான தாக்குதல்கள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றங்களாக அமையமுடியாது.

இந்திய - இலங்கை அமைதி உடன்பாட்டின் கீழ் — பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள், போராளிகள், அரசியல் மற்றும் ஏனைய கைதிகளுக்கு இலங்கை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும் அம்சம் இருந்ததை இங்கு கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

29. 7. 1987 இன் பின்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புரிந்த குற்றங்களே இங்கு பொருத்தமானவையாக இருக்கலாம்.

எதிரியிடமிருந்து ஆயுதங்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை. தாம் குறிப்பிட்ட ஆயுதங்களை வைத்திருந்ததாக எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து அவர் மீது குற்றம் சாட்டுவது சட்டத்துக்கு உட்பட்டதல்ல. ஆகவே அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து அவர் மீது விசாரணை நடத்துவதை நீதிமன்றம் அனுமதிக்காது — இப்படி அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

நாளை

எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மேற்பார்வையாளராகவும் நிரந்தர நோக்குநர்களாகவும் நியமிக்கப்பட்ட சகலரும் தமது கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரை நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் சந்திக்குமாறு வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு உதவிப் பணம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை 5ஆம் திகதி புலோலியிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

★ ★ ★

தென்மராட்சி, ஒக 4 தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் (அ-117)

★ ★ ★

மக்கள் நலன்புரி கழக தொண்டர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் உதவி சமூக பாதுகாப்பு ஒழுங்குகள் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. (ஐ)

சு.க.வுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

'கெத்துமா' என்ற பெயரிலான இப்படம் சுயாதீன தொலைக் காட்சிச் சேவையில் ஒளிபரப்பப்படவிருந்தது.

இப்படம் திரையிடப்படுவதை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சேபித்து இருந்தது. (உ-எ)

அணுகுண்டைவிட உயர்ந்தது மனோபலம்

அதிலே உயர்ந்து நிற்பவர்கள் புலிகள்

சாவகச்சேரி, ஒக 4 உலகின் போக்கை அணுகுண்டு தீர்மானித்து வந்தது. ஆனால் இன்று மனோபலம் தான் அதனைவிட உயர்ந்து நிற்கிறது. அதில் உயர்ந்து நிற்பது எமது விடுதலை அணியே.

யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி மேற்கண்டவாறு கூறினார்

கடந்த 31ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற ஆனையிறவு ஆகாயகடல் வழி இராணுவ நடவடிக்கையில் வீரமரணமடைந்த மாவீரர்களின் மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் இளம்பரிதி உரை நிகழ்த்தினார்.

கொடிகாமம் பிரதான வீதியில் அமைந்துள்ள நினைவாலயத்துக்கு முன்பாக தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. இளம்பரிதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாங்கள் எம் மக்கள் மீது இருக்கின்ற சுமைகளை போக்கி அவர்களை நிம்மதியாக சுபீட்சம் நிறைந்தவர்களாக ஆக்க முனைகின்றோம்.

கொடிகாமம் கூட்டத்தில் இளம்பரிதி

ஆனால் நாம் விடுதலை பெற்ற நாட்டில் இருப்பது போல நிம்மதியாக இருக்கின்றோம்

எனவே மக்கள் மனநிலை மாறவேண்டும்.

நீங்கள் போர்க்காலச் சூழ்நிலையில் இருக்கின்றீர்கள். தமிழீழ பிரதேசம் யாவும் யுத்த களமாகவே இருக்கின்றது மக்களிடம் போர் உணர்வு இருக்க வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டம் — அதனுடைய வளர்ச்சி உலக போராட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி நிற்கின்றது.

உலக அரங்கில் அமெரிக்கா ஈடுகொடுக்க முடியாது ஒதுங்கி நிற்கிறது. அடுத்த பக்கத்தில் இந்தியா எம் போராட்டத்தை — தலைமைத்துவத்தை நசுக்கப் பார்க்கிறது. ஆனால் இந்தியா உடையப் போகின்றது

எனவே அமெரிக்கா ஒதுங்க இந்தியா உடைய எம் போராட்டம் வளர்ச்சி அடையும்.

நாம் தே[illegible]கின்றோம். இந்[illegible] உள்ள பல[illegible]சானது தமிழீழத்தில் போராட்டம் ஒன்று நடக்கவில்லை என உலகிற்கு காட்ட முனைகின்றது.

நாம் விடியலின் விளிம்பில் நிற்கின்றோம் எனவே எமது மனோபலமும், மக்களது எழுச்சியும் முக்கியமாகின்றன.

இப்படி அவர் கூறினார்.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு அரசியல் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

விடுதலைப் போராட்டத்திலும் வரலாறுகள் இருக்கின்றன. எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏனைய விடுதலைப் போராட்டங்களை விட வித்தியாசமான — முன்னுதாரணமாக திகழ இந்த மாவீரர்களின் செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன.

ஏனைய விடுதலைப் போராட்டங்களில் நவீனரக ஆயுதங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்களை வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் [illegible]டத்தில், துணிவுடனும் மனோ[illegible]டன் மோதி இரத்தம் சிந்தி ஆயுதங்களை பெறுகின்றோம்

இம் மாவீரர்கள் தமது உயிரை ஆயுதமாகப் பயன்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்திற்கே பெருமை தேடித் தந்துள்ளார்கள்.

எமது போராளிகள் பல வழிகளில் வீரச்சாவடைகின்றனர்.

கரும்புலியாக —

மரபு வழி இராணுவமாக —

இரகசியத்தைக் காப்பாற்றும் வீர மறவனாக — தன்னையே மாய்த்துக் கொள்ளும் பல வடிவங்களில் இவ் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றுகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் எந்தவொரு போராளியும் கோழையாக மடிந்ததில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் பூ[illegible] ஐயா, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம். திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்கன், அரசியல் துறை பயிற்சிக்கல்லூரி பொறுப்பாளர் மனோ. அரசியல் துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த அரசண்ணா ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (இ-117-31)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச சபை,

மரண அறிவித்தல்கள்

சின்னத்தம்பி சின்னவர் சுப்பையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

சின்னத்தம்பி சின்னவர் சுப்பையா (இளைப்பாறிய ஆசிரியர்) 1 - 8 - 94 இல் இறைவன் அடியெய்தினார்.

அன்னார் சௌபாக்கியவதியின் அன்புக்கணவரும், மகேஸ்வரன், சிவானந்தன், நாகரத்தினபூபதி, விவேகானந்தன், கருணானந்தன், சச்சிதானந்தமலர், சரோஜினிதேவி, கனானந்தன், தவமணிதேவி, கோமலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாவித்திரி, கீதா, இராமகிருஷ்ணன், கலாநிதி, நளினி, குகதாஸ், சத்தியநாதன் ஆகியோரின் அன்புமாமனாரும், கிருபன், சிவரூபன், ரஜீவ், ரமேஷ், அரவிந்தன், செந்தூரன், தேவகி, பிரசாந்தன், கஸ்தூரி, நிதர்ஷா, றோகா, ஆகியோரின் பாட்டனுமாவார்.

தகவல்
திருமதி க. இராமகிருஷ்ணன்.
(மகள்)

குமரகோட்டம்
கைதடி மேற்கு,
கைதடி.

(32236)

செல்வி பவளேந்திரன் அபிராமி

செல்வி. பவளேந்திரன் அபிராமி (யா/வீரசிங்கம் மகா வித்தியாலய ஆண்டு ஒன்று மாணவி) 03-8-94 அன்று காலமானார்.

இவர் மீசாலை வடக்கை சேர்ந்த திரு. சி பவளேந்திரன் (ஆசிரியர் யா/எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம்) தம்பதிகளின் ஏக புத்திரியும், திரு. திருமதி க. கிருஷ்ணன் (முறிவு நோவு, வைத்தியர்) அவர்களின் பேர்த்தியும், பிரதீபன், சஜதீபன், ஜெகதீபன், ஆகியோரின் அருமைச் சகோதரியும், இ. பிரபாகரன், செல்வி. சி. அற்புதமலர் (வெளிவாரி பட்டதாரி மாணவர்கள் யா/புதிய உயர் கலைக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

இறுதிக் கிரியைகள் 04.08.94 இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
சி, பவளேந்திரன்
(தந்தை)

மீசாலை வடக்கு
மீசாலை

(32241)

நாகலிங்கம் தர்மராசா

(நெல்லியடி டைமன் வெல் டேர்ஸ் உரிமையாளர்)

நாகலிங்கம் தர்மராசா (உரிமையாளர் டைமன் வேல்டேர்ஸ், நெல்லியடி) 3 - 08 - 1994 காலை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதர் நாகலிங்கம் சின்னம்மா ஆகியோரின் மூத்த மகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருஷ்ணகுமார், விஜிதா (கனடா), மணிவண்ணன் (கனடா), கமலக்கண்ணன் (பொறியியலாளர் கொழும்பு), சோபியா, அருள் ஆகியோரின் தந்தையாரும், ராசேந்திரம், தெய்வேந்திரம் (இந்திரா கபே), புவனேந்திரம், மகேந்திரன் [உடுப்பிட்டி மெதடிஸ்த மிஷன் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
குடும்பத்தினர்

(32237)

OBITUARY

Mrs. ATPUTHAM GUNARATNAM

The death occured in Surrey U.K on the 30th of July, of Mrs Atputham Gunaratnam Beloved wife of A T. Gunaratnam Former Chairman United Electricals Colombo), and Loving Mother of Shanthi (U.K.] Mano (Australia) and the late Bobby, mother in law of Dr Sathananthan and Ranee.

Funeral will take place on the 6th of August in Surrey.

J. S SELVARATNAM.

Palaly Road,
Kondavil

(32223)

கூட்டுறவாளர் விழா

யாழ்ப்பாணம் ஓ. 3

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினரால் நடத்தப்படும் 72ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

(ஐ-4)

விளையாட்டு நிகழ்வுகள்

விளையாட்டுத்துறை அமைச்சினால் யாழ் மாவட்டரீதியில் நடத்தப்படும் மேசைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ். வை. எம். சி. ஏ உள்ளரங்கில் நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான ஒற்றையர் இரட்டையர் ஆட்டங்கள் நாளை மறுதினம் சனிக்கிழமையும்—

ஆண்களுக்கான ஒற்றையர் இரட்டையர் ஆட்டங்கள் எதிர்வரும் 8ஆம் 9ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

போட்டிகள் யாவும் பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகும்.

(ஐ-20)

* * *

திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான 10 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 4-15 மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இறுதியாட்டத்தில் வாலையம்மன். வி. க. பச்சை அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதும்.

* * *

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பாரதி சுற்றுக் கேடயத்திற்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை இரவு 7-30 மணிக்கு கழக உபதலைவர் திரு.சி. முருகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்க் கிளைத் தலைவர் டாக்டர் வீ. தியாகராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

(உ-க)

ஒளிவீச்சு வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஓ. 4

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையின் ஜூன் மாதம் பிரதி வெளிவந்துள்ளது.

அந்த ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள், தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்ச்சிகள் மற்றும் தமிழீழ காவல்துறை பற்றிய விவரணம், விமானக் குண்டு வீச்சை கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வல காட்சிகள் என்பனவற்றுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

அந்த வீடியோ சஞ்சிகை நாளை (வெள்ளி) மாலை 6 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

(ஐ)

ஆலயங்களில்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை (வெள்ளி) பிற்பகல் 3 மணிக்கு "சூரனை வென்ற சுடர் மகன்" என்ற தலைப்பில் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி ஆசிரியர் திரு. ஜெயபரன் ஜெகதீஸ் உரையாற்றுவார்.

(ஐ)

அதிபர்கள் கூட்டம்

வலிகாமம், தெற்கு, ஓ 4

சங்கானை கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறவுள்ளது.

சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

(க-152)

* * *

உடுவில் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். இரட்ணராசா தலைமையில் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழ்மொழிப் பாட விருத்தி பற்றி கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி உரையாற்றுவார்.

(க-152)

பாக். வெற்றி

பாகிஸ்தான் — ஸ்ரீலங்கா அணிகளுக்கு இடையில் நேற்று கொழும்பு ஆர். பிரமதாஸா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஒருநாள் கட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் பகல் — இரவு கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 200 ஓட்டங்களைப் பெற்றது. சனத் ஜெயசூரியா 77, அர்ஜுனா ரணதுங்கா 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

மழையின் குறுக்கீட்டினால் 42 ஓவர்களில் 169 ஓட்டங்கள் என்ற நிலைக்கு இலக்கு குறைக்கப்பட்டது. பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு இந்த ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வென்றது.

(உ)

வேலைநிறுத்தம்

சம்பள உயர்வு கோரி ஆலைத் தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவாக டாக்டர்களும், ரயில்வே ஊழியர்களும் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கொழும்பில் ரயில்வே மற்றும் மருத்துவமனைப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தேர்தல் நேரத்தில் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே இந்த வேலை நிறுத்தத்தை தூண்டுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இதனை முற்றாக மறுத்துள்ளது.

பொதுத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தென் மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டியது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரப்போவதாக சந்திரிகா அளித்த உறுதிமொழியே இவ்வெற்றிக்குக் காரணம்.

இப்படி பார்த்தால் —

சிங்களவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிங்களத் தீவிரவாதத்தை துரும்பாகப் பாவித்த காலம் முடிவுக்கு வந்துவிட்டதாகவே தோன்றுகின்றது.

வாக்குகளைப் பெறும் துரும்பாக சிங்களத் தீவிரவாதத்தை இனியும் பயன்படுத்த முடியாது.

எதிர்வரும் தேர்தல் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் நடைபெற்றால் மட்டுமே சந்திரிகா வெற்றிபெறும் வாய்ப்பு உண்டு.

இத்தேர்தலில் ஊழல்புரிந்து குழப்பும் எண்ணம் ஜனாதிபதி விஜேதுங்காவிடம் இல்லை எனத்தெரிகிறது.

கடந்த காலக் குற்றங்களுக்காக பழிவாங்கப்படமாட்டார்கள் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தலைவர்கள் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்து பொலீஸார் பாரபட்சமின்றி நடக்கத் தலைப்பட்டுள்ளனர்.

— இப்படி அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

(உ-எ-6)

சாவகச்சேரி
அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சித்திரத் தேர்த்திருவிழா

காலம். **06.08.94** சனிக்கிழமை
மு. ப. 10 மணி

விழா நிகழ்வுகள்:

காலை 7 மணி — அபிஷேகம் விசேட பூஜை
காலை 8 மணி — வசந்த மண்டப பூஜை
காலை 10மணி — அம்பாள் தேரில் எழுந்தருளல் தொடர்ந்து வீதியுலா அர்ச்சனை ஏற்றருளல் பிராயச்சித்த அபிஷேகம் பஞ்சமுகார்ச்சனை.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

பிரம்மஸ்ரீ. ப. மகாகணபதி சர்மா,
தர்மகர்த்தா.

வாழ்த்துபவர்:

செல்வம் கூல்பார்
நியூமார்க்கற்,
சாவகச்சேரி.

(82199)

ஊரெழு

ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் ஆலயம்

இன்று (04 — 08 — 1994) மாலை 6 மணிக்கு
N. K. பத்மநாதன் அவர்களின்
நாதஸ்வர மழை
- 7ஆம் திருவிழா உபயகாரர்.

[7572]

சாவகச்சேரி

அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
ஆடிப்பூர விழா

மாதரசிகள் பங்குகொள்ளும்
திருவிளக்குப்பூஜை

எதிர்வரும் 09 — 08 — 94 செவ்வாய்க்கிழமை ஆடிப்பூரத் திருநாளன்று காலை 9 மணிக்கு அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும், விசேடபூஜையும் பி.ப 3 மணிக்கு விசேடபூஜையைத் தொடர்ந்து மாதரசிகள், கன்னிகைகள் பங்குகொள்ளும் (சுமங்கலி பூஜை) திருவிளக்குப் பூஜையும் நடைபெறும். திருவிளக்குப்பூஜையில் பங்குகொள்ளும் பெண்மணிகள் தாமதியாது தங்கள் பெயர்களைத் தேவஸ்தானத்தில் பதிவு செய்துகொள்ளவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

— பிரம்மஸ்ரீ ப. மகாகணபதிசர்மா.
(தர்மகர்த்தா)

விளம்பர அன்பளிப்பு:

P. S பத்மநாதன் குடும்பம் (நோர்வே),
R. மகாஜெயம் குடும்பம் (டென்மார்க்),
"பத்மபதி",
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(32200)

மரண அறிவித்தல்

இறப்பியேற்பிள்ளை இம்மானுவல்

(முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ரைம் கீப்பர்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட, இறப்பியேற்பிள்ளை இம்மானுவல் நேற்றுக் காலமானார்.

இவர் திரு. இறப்பியேற்பிள்ளை, காலஞ்சென்ற அன்னம்மா தம்பதிகளின் அன்பு மூத்த மகனும், சிசிறாவியின் அன்புக் கணவரும், இக்னேஷியஸ் (பபி), அருள்நேசன் (ரவி - சுவிஸ்), அருள்தேவன் (ஜோய் - கனடா), காலஞ்சென்ற அருள்உதயன் (கிங்), மத்தியூஸ் (றொபி - இங்கிலாந்து), அருட்செல்வன் (றெஜி - இங்கிலாந்து), சாள்ஸ் (றெமி - இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்செல்வி, லலிதா, அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், வேதநாயகம், சிங்கராசா, செல்வநாயகம், புஸ்பராணி, துரைசிங்கம், ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேதநாயகம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), பெனடிக்ற் (கனடா), றிச்சட், அன்றா (இ. போ. ச, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டினேஷ், நரேஷ், டிபோரா, நிக்லா, மேரி சோபனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 4-8-94 மாலை 4 மணியளவில் நெல்லியடிச் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. அன்றா
மைத்துனர்
(இ. போ. ச.)

புலோலி தெற்கு,
புலோலி.

(32243)

மிக விரைவில்....

☆ தமிழோசை ☆ இது எங்கள் தேசம் ☆ தாயகக்கனவு
☆ சின்ன விழிகள்

போன்ற வெற்றிப் படைப்புக்களைத் தந்த
பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு

இன்னும் ஒரு நாடு

தயாரிப்பு: முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்.

(சி-8658)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.